1975 மார்ச் 12] [திரு. எம். ஏ. லத்தீப்]

கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் அன்றைக்கே கேட்டேன். மைனாரிட்டீஸ் இன்டரெஸ்டுகளைப் ப்ரொடெக்ட் செய்ய ஒரு தனி டைரெக்டரேட்டையே இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அந்தமாதிரி ஏற்படுத்தினால்தான் அவர்கள் அவ்வப்போது சிறுபான்மை வகுப்பினர்களைப் பற்றிய பல ஆய்வுகளை செய்வதற்கு வழியேற்படும். அவர்களது குறைகளை உடனுக்குடன் களைவதற்கும் முடியும். அப்படி தனியாக ஒரு டைரெக்ட்ரேட்டையே ஏற்படுத்த முடியாது என்றாலும் உடனடியாக செக்ரடரி ஃபர் சோஷல் வெல்பாரின் கீழ் டெபுடி செக்ரடரி ஃபர் மைனாரிட்டீஸ் என்றாவது உடனடியாகப் போடு வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

(5) விளக்கம் கோரல்

அரசியல் நிர்ணயச் சட்டத்தை குறைகூறிப் பேசுவது குறித்து

THIRU R. PONNAPPA NADAR: Sir, I want to have a clarification from the Chair. The other day Thiru K. T. K. Tangamani rose on a point of order stating how far we can criticise the Constitution in this House. You had been in the Chair at the time of discussion. When the point was raised, the Hon. Speaker was pleased to say that ruling would be given within a couple of days. Now that the Deputy Speaker is in the Chair, it would be better if you could give a revised ruling on that point; You had previously said that we could criticise the constitution in this House. I would like to have your clarification on this point.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அன்றையதினம் அவையில் எழுந்த பிரச்சினை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்னர் அதைப்பற்றிப் பேசலாமா என்பது. அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றி எதை வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்ற அடிப்படையில் நான் சொன்னேன்.

அதற்குப் பிறகு திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் பேசும் போது நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான் சொல்லிவிட்டீர்களே என்ற முறையில் குறிப்பிட்டபோது நாம் நம்முடைய மன்றத்திற்காக சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம், இந்த விதிமுறைகளுக்குட்பட்டே அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னேன்.

அதே அடிப்படையில்தான் இன்றையதினமும் சொல்கிறேன். முன்பு திரு. அனந்தசயனம் அவர்கள் சொல்லும்போது அரசியல் அமைப்புச் சட்டம் 194 பிரிவுப்படி அப்சல்யூட் ஃப்ரீடம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றார்கள். ஆனால் அதற்கு ஒரே ஒரு கட்டுப்பாட்டை அரசியல் சட்டத்தில் வைத்திருக்கிறார்கள். பிரிவு 211 இன் கீழ் உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பற்றியோ, உயர்நீதிமன்ற நீதிபதியைப் பற்றியோ—நீதிமன்றங்களின் செயல்முறைகளைப் பற்றியோ பேசக் கூடாது என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அதுபோல அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதித்துள்ள கட்டுப்பாட்டை வைத்து தான் நாமும் நம்முடைய விதிமுறைகளில் சில கட்டுப்பாடுகளை இதுபற்றி வைத்திருக்கிறோம். நம்முடைய விதிமுறைகளுக்கு உட்பட்டே நாம் அதைப்பற்றிப் பேச வேண்டும். இதைத்தான் அன்றைக்கும் சொன்னேன். வேறு இதில் எந்த விளக்கமும் தேவையில்லை. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

(4) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிநிலைக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **திரு. வி. பழனிவேலு** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட நலத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்லுகின்றேன்.

இன்று நமது டாக்டர் கலைஞர் அரசு பிற்பட்ட நலத் துறைக்காக ஐந்து கோடியே எழுபத்தெட்டு லட்சம் ரூபாய் சொச்சம் ஒதுக்கியிருக்கிறது. 1969 ஆம் ஆண்டிலேயே இதற் கென்று தனித் துறையையே போட்டு, ஒரு அமைச்சரவைப் போட்டிருக்கிறது. இதன்மூலம் பிற்பட்ட சமூகத்தினர்களுக்கு பல நல்ல காரியங்களைச் செய்து வருவதைப் பாராட்டுகிறேன்.